1979 பிப்ரவரி 13]

## கைத்தறித் துறையில் பணியாற்றும் முதுநிலை ஆய்வாளர்கள்.

* வினா எண் 40—திரு. துரை முருகன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கைத்தறித் துறையில் பணியாற்றிவரும் கூட்டுறவுத் துறையைச் சார்ந்த முதுநிலை ஆய்வாளர்களை கைத்தறித் துறையிலே நிரந்தரமாக எடுத்துக் கொள்ளும்படியும், அவர்களுக்கான சீனியாரிட்டியை வழங்கும்படியும் சென்னை உயர் நீதி மன்றம் 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 30 ஆம் நாள் தீர்ப்பு ஒன்று வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : (அ) ஆம்.

(ஆ) உயர் நீதி மன்ற தீர்ப்பிற்கிணங்க கூட்டுறவுத் துறையைச் சார்ந்த முதுநிலை ஆய்வாளர்களை அவர்களுக்கு விருப்பமிருப்பின் கைத்தறித்துறையிலே, நிரந்தரமாக எடுத்துக்கொள்ளும்படியும் அவர்களது பணிமுதுநிலையை அமுலில் உள்ள விதிகளின் அடிப்படையில் நியமிக்கும்படியும் கைத்தறி பஞ்சாலை இயக்குநருக்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இதுவரையில் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் எவ்வளவு பேர்களை அரசு எடுத்திருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜகதீசன் : தலைவரவர்களே, உயர்நீதி மன்றத் தீர்ப்பை அமல்படுத்துமாறு அரசு ஆணை நிலை எண் 1361, தொழில், நாள் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25-ஆம் நாளில் கைத்தறி பஞ்சாலை இயக்குநருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கைத்தறி பஞ்சாலை துறையில் வேலை செய்துகொண்டிருக்கின்ற விருப்பம் தெரிவிக்காத, விருப்பம் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படாத கைத்தறி ஆய்வாளர்களிடம் விருப்பம் கேட்கப்படும். அவர்கள் விருப்பம் தெரிவித்தபின் எத்தனைபேர்கள் எடுத்துக்கொள்ளப் படுவார்கள் என்று முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]